18th September 1958]

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கூட்டுறவு சாகுபடி முறையை அதிகப்படியாக கொண்டுவர வேண்டுமென்று எண்ணக்கூடிய இந்நாளில் கூட்டுறவு சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நிலங்களில் தேவஸ்தான நிலங்கள், மடாலய நிலங்கள் இவைகளை உடன் எடுத்துக் கொண்டும், இவைகளை எடுத்துக்கொள்ளும்போது நிர்வாக அதிகாரிகள் மடாலய தலைவர்கள் அனுமதியைக் கோராமலேயே எடுத்துக் கொண்டு கூட்டுறவு சாகுபடி முறையை அமைக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நிலவுடமைக்காரர்களின் அனுமதி இல்லாமல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது கஷ்டமான விஷயம். அவர்களின் அனுமதியைக் கேட்டுத்தான் இந்த விதமான சொஸைட்டிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

SRI M. P. SARATHI : வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்து கூட்டுறவு பண்ணை ஏற்படுத்த ஒரு மகஜர் வந்ததா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : தகவல் என்னிடம் இல்லை.

SRI S. LAZAR : தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்திய முதல் சொஸைட்டியில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி வருமானம் எவ்வளவு வந்தது ?

How does it compare with the yield got by an individual in the same locality when he cultivates it himself ?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put, Sir.

SRI P. U. SHANMUGAM : விவசாய அமைச்சர் அவர்கள் அன்று பதிலளிக்கும்போது கூட்டுறவு விவசாயம் வெற்றிகரமாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அது வெற்றிகரமாக நடக்கிறது என்று சொல்கிறார்கள். இவ்விரண்டில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவு முறை நன்கு நடக்கிறது என்றுதான் சொல்லுவார்.

Vaigai Reservoir Project.

* 294 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilize the buildings constructed for the use of the officers and staff employed in the Vaigai Reservoir Project after its completion for the Grama Sevak Training Centre or Teachers Training School?

THE HON. SRI P. KAKKAN : No.

SRI N. R. THIAGARAJAN : வைகை ப்ராஜெக்ட், பெரியார் ப்ராக்ஜெக்ட், அமராவதி ப்ராஜெக்ட் போன்றவைகளுக்கு பல லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்து கட்டிய கட்டிடங்கள் சும்மா இருக்கிறது. அதை பயன்படுத்த ஏதாவது திட்டம் வகுக்கக் கூடாதா ?

THE HON. SRI P. KAKKAN : எந்தெந்த கட்டிடங்களை பயன்படுத்த முடியுமோ அவைகள் பயன் படுத்தப் படுகிறது. தேவையில்லாத இடங்களில் பயன் படுத்தப்படவில்லை.

Hut Dwellers.

* 295 *Q.*—Sx) K. VINYAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many hut dwellers live in the Mambalam Tank Bund area in Madras;